**MCOP NO. 63/2021**

**Date 17.04.2026**

**Pw 1 சவீதாமணி**

**முதல் விசாரணையின் தொடர்ச்சி**

இறந்து போன ஜெயபால் என்பவரின் வாரிசு சான்றிதழ் **ம.சா.ஆ. 20** ஆகும்.

**2 ம் எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு திருமணம் ஆகி நான் தனியாகத்தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். 3 ம் மனுதாரர் என்பவருக்கும் திருமணம் ஆகி நான் தனியாகத்தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். என்னுடைய சகோதரிகளான 4, 5 மனுதாரர்களும் திருமணம் ஆகி அவர்களுடைய கணவருடன் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது அப்பா, அம்மா தனியாத்தான் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான். நான், மற்றும் 4, 5 மனுதாரர்களான எனது சகோதரிகளும் இறந்து போன நபரை சார்ந்து வாழவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது சகோதரர் சசிக்குமார் கூலி வேலை பார்க்கிறார். எனது அப்பா புரோட்டா மாஸ்டராக வேலை பார்த்து மாதம் ரூ. 15000/- சம்பளம் பெற்று வந்தார் என்பதை காட்டுவதற்குரிய எந்த ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி விபத்தின்போது எனது அப்பா மேற்கில் இருந்து கிழக்காக திடீரென சாலையை கடக்கும்போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு முதலில் சிவகிரி அரசு மருத்துவமனையில் முதல் சிகிச்சை அளிக்கப்பட்டது. அதன் பின்னர் தென்காசியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார் என்றால் சரிதான். மேற்படி மருத்துவமனையின் மருத்துவர் திருநெல்வேலியில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைக்க சொன்னார்கள். தென்காசி அரசு மருத்துவமனையில் கூறியது போல எனது அப்பாவை திருநெல்வேலியில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லவில்லை என்றால் திருநெல்வேலிக்கு அழைத்து சென்றேன் ஆனால் அங்கு பார்க்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். நான் திருநெல்வேலிக்கு சிகிச்சைக்காக அழைத்து செல்லவில்லை என்றாலும், அங்கு சிகிச்சையளிக்க மறுத்துவிட்டார்கள் என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதற்கு பின்பு

எனது அப்பாவிற்கு சிகிச்சை எதுவும் கொடுக்கவில்லை என்றால் திருமலை கணேசன் மருத்துவரிடம் மருந்து சீட்டு பெற்று அதன் பேரில் நாங்கள் வீட்டில் வைத்து சிகிச்சை அளித்தோம். நான் எனது அப்பாவிற்கு தென்காசி மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட சிகிச்சை சம்மந்தமான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு பிரேத பரிசோதனை செய்யவில்லை என்றால் சரிதான். எனது அப்பா விபத்து நடந்து 9 நாட்கள் கழித்து தான் இறந்தார் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு இறக்கும் போது வயது 60 இருக்கும். விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்கும், எனது அப்பாவின் இறப்பிற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றாலும், விபத்தின் காரணமாக எனது தந்தை இறக்கவில்லை என்றாலும் சரியல்ல . விபத்தில் எனது தந்தைக்கு நெற்றி, தோள்பட்டை மற்றும் உதடு ஆகிய இடங்களில் அடிப்பட்டு பேச இயலாத நிலையில் இருந்தார். விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த 1ம் எதிர் மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் 2ம் எதிர் மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டதல்ல என்றால் சரியல்ல. எனது அம்மாவை தவிர நான் உட்பட மற்ற மனுதாரர்கள் இறந்து போன எனது தந்தையின் வருமானத்தை சார்ந்து இருக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை அதிகமானது என்றால் சரியல்ல. மேற்படி விபத்திற்கு எனது அப்பாவின் தற்கவனமின்மை காரணம் என்பதால் இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2ம் எதிர் மனுதாரரைப் பொருத்து மனு தள்ளுப்படி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/–P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.